புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • செப்டம்பர் (SEPTEMBER) 17, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 39 • விலை(PRICE) ரூ.6.00

## எமர்ஜென்சியும் பார்ப்பனர்களும்!

50 ஆண்டுகளுக்கு முன்பு ஜனவரி-31 அன்று தமிழ்நாட்டில் முதல் முறையாக கலைஞர் தலைமையில் நடந்த திமுக ஆட்சி ஒன்றிய அரசால் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டது. இந்த அடக்குமுறை சர்வாதிகாரத்தை எதிர்த்து துணிவோடு குரல் கொடுத்தார் கலைஞர். சென்னை கடற்கரையில் பல லட்சம் மக்களை திரட்டி அவசர நிலைக்கு எதிராக உறுதிமொழியை எடுக்க வைத்தவர் கலைஞர்.

இந்தியாவிலேயே தமிழ்நாடு மற்றும் ஜனதா கட்சி ஆட்சி செய்த குஜராத் மாநிலம் தான் அவசர நிலையை எதிர்த்தது. இதுகுறித்த வரலாற்றுக் குறிப்புகளை 'இந்து' ஆங்கில நாளேடு வெளியிட்டு இருக்கிறது. அதிமுகவை தொடங்கியிருந்த எம்.ஜி.ஆர் இந்த அவசரநிலை பிரகடனத்தை வரவேற்றார்' சர்வாதிகாரியாக மாறிய இந்திரா காந்தி ஆட்சியின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருப்போம் என்று அறிக்கை வெளியிட்டார்.

அப்போது ஆளுநராக இருந்தவர் கே.கே.ஷா ஆளுநர் ஆட்சியின் கீழ் தமிழ்நாடு கொண்டு வரப்பட்டது. ஆளுநருக்கு ஆலோசகராக மத்திய அமைச்சக அதிகாரிகளான இரண்டு பார்ப்பனர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஒருவர் பெயர் தவே; மற்றொருவர் பெயர் ஆர்.வி.சுப்பிரமணியம்; இவர் தமிழ்நாட்டு பார்ப்பனர். அரசியல் கட்சி நடவடிக்கைகளை முற்றாக முடக்கி எழுத்துரிமை, பேச்சுரிமை இல்லாத அந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசு அமைப்பைப் பார்ப்பனமயமாக்க இந்த அதிகாரிகள் தீவிரமாக செயல்பட்டனர். அதிலும் குறிப்பாக ஆர்.வி. சுப்பிரமணியம் தமிழ்நாட்டின் முழு அதிகாரத்தையும் கையில் எடுத்துக் கொண்டார். ஆளுநரின் ஆலோசகராக வந்தவர் அடிக்கடி காஞ்சிமடம் சென்று சங்கராச்சாரியின் ஆலோசனைகளைப் பெற்று நிர்வாகத்தை நடத்தினார். கலைஞர் ஆட்சியில் நிர்வாக அதிகாரிகளாக இருந்தவர்கள் பந்தாடப்பட்டனர். 14அரசுத்துறை செயலாளர்களில் 12பேர் பார்ப்பனர்களாக நியமிக்கப்பட்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களில் 80 விழுக்காட்டினர் பார்ப்பனர்களாக பதவியேற்றனர்.

இப்போது மோடி ஆட்சியின் மாநில உரிமைப் பறிப்புகளுக்கு எதிராக தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஸ்டாலின் எப்படி உரத்த குரல் கொடுக்கிறாரோ அதேபோல் அன்றைக்கு கடுமையான ஒடுக்குமுறை தலை விரித்தாடிய காலத்தில் கலைஞர் அவசர நிலைக்கு எதிராக மாநில உரிமைக்குக் குரல் கொடுத்தார்; அதற்காகவே ஆட்சியை இழந்தார். அவசர நிலை பிறப்பிக்கப்பட்ட பிறகு 7 மாதங்கள் நடந்த கலைஞர் ஆட்சி அவசரநிலை அறிவிப்புக்கு எதிராக செயல்படுவதாகவும் பிரிவினை சக்திகளுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் ஆளுநரின் அறிக்கை கூறியது.

தமிழ்நாடு பார்ப்பனமயமாகி வருகிறது என்ற அதிருப்தி காங்கிரஸ் வட்டாரங்களிலேயே எழுந்தது குறிப்பாக மாநிலங்களவை துணைத் தலைவராக இருந்த முரஹரி பலமுறை தமிழ்நாட்டிற்கு வருகை தந்து பார்ப்பன ஆட்சியை நேரில் கண்டு கொதிப்படைந்து இருக்கிறார். இதை அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் வெளிப்படுத்தினார். 2013ல் அம்பலத்துக்கு வந்த அமெரிக்காவின் 'விக்கிலீக்' ரகசிய ஆவணங்களில் இந்தத் தகவல்கள் பதிவாகி இருப்பதை இந்து ஏடு சுட்டிக் காட்டி இருக்கிறது.

அன்றைய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த டி.கே.பரூவாவும் உள்துறை இணை அமைச்சராக இருந்த ஓம்மேத்தாவும் இதற்கு அதிருப்தி தெரிவித்தனர் என்றும், இந்தப் பார்ப்பன அதிகாரிகளை நியமித்து தவறு செய்து விட்டோம் என்றும், ஒப்புக் கொண்டுள்ளனர் என்ற செய்தியையும் 'விக்கி'-லீக்கை மேற்கோள் காட்டி 'இந்து'ஏடு செய்தி வெளியிட்டுள்ளது. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அதிகாரத்தின் உச்சியில் பவனி வந்தது. காங்கிரஸ் கட்சிக்குள் மூப்பனார் அணி ஒன்றாகவும், பழ.நெடுமாறன் அணி ஒன்றாகவும் இரு துருவங்களாக செயல்பட்டனர். பழ.நெடுமாறன் அவசர நிலையைத் தீவிரமாக ஆதரித்தாலும் ஆர்.வி சுப்பிரமணியத்தின் பார்ப்பனமயமாக்கலை எதிர்த்து அவரிடமே புகார் செய்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

அவசரநிலைக் காலம் என்றாலும் அமித் ஷா ஆட்சிக் காலம் என்றாலும் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்துக்கே பயன்படுத்துவார்கள், இதுதான் வரலாறு. கடப்பாரை தூக்கும் கழிசடைகளுக்கு இது புரியாது!

# அவசரநிலை அறிவிக்கப்பட்டது ஏன்?

1. அலகாபாத் உயர் நீதிமன்றம் இந்திராவின் தேர்தல் 'செல்லாது என்று 12.6.1975ல் தீர்ப்பு வழங்கியது.

2. ஆனால், பதவியைவிட்டு விலக இந்திரா மறுத்தார்.

3. மத்திய அமைச்சராக இருந்த திரு. சென்னாரெட்டி தேர்தல் செல்லாது என்று ஆந்திர உயர்நீதிமன்றம் 26.4.1968ல் தீர்ப்பு வழங்கியபோது, ராஜினாமா கோரிப் பெற்ற இந்திரா காந்திக்கு இதுபோன்ற தீர்ப்பு தனக்கு வந்தபோது பதவியை விட மனமில்லை.




4. மாற்று ஏற்பாடுகள் செய்து, புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க தனக்கு அவகாசம் தருமாறு காரணம் கூறி, தீர்ப்பை நிறுத்தி வைக்க இடைக்காலத் தடை பெற்றார் இந்திரா. இதைப் பயன்படுத்திக்கொண்டு தனது பதவியைக் காப்பாற்றும் சட்ட முயற்சிகளில் இறங்கி அப்பீல் செய்தார்.

5. ராஜினாமா செய்யுமாறு நாடெங்கும் எதிர்ப்புகள் கிளம்ப ஆரம்பித்தவுடன், தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள அவசர நிலைப் பிரகடனம் (Emergency) செய்தார் இந்திரா.

6. நாட்டுத் தலைவர்கள் காரணமின்றி மிசாவின்கீழ் கைது செய்யப்பட்டனர்.

7. பத்திரிகைகளுக்கு முன் தணிக்கை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. இந்திராவையோ, காங்கிரசையோ. அமைச்சர்களையோ எதிர்த்து யாரும் எழுத முடியாது.

8. அவசர அவசரமாக தேர்தல் சட்டங்கள் திருத்தப்பட்டு, தன்மீதும் ஜனாதிபதிமீதும் யாரும் தேர்தல் வழக்குப் போடமுடியாதவாறு சட்டத்தைத் திருத்தினார்.

9. அவசர நிலைப் பிரகடனம் செய்யும் முடிவையே, அமைச்சரவையை கலந்தாலோசிக்காமல், ஜனாதிபதி மூலம் பிரகடனம் செய்யச் சொல்லிவிட்டு, மறுநாள் தான் அமைச்சரவையைக் கூட்டி அதற்கு ஒப்புதலைப் பெற்றார்!

10. தேர்தல் சட்டங்களைத் திருத்திக்கொண்டு, திருத்தப்பட்ட புதிய சட்டம் 1971 முதலே அமுலுக்கு வந்ததாகக் கருதப்படும் என்று எழுதி, அந்த அடிப்படையில், தனது தேர்தல் செல்லும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைப் பெற்றார். (இந்தத் திருத்தப்பட்ட சட்டங்கள் முன் தேதியிட்டு அமுலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது) எந்தெந்த சட்டத்தின் மூலம் இந்திராவின் தேர்தல் செல்லாது என்று அறிவிக்கப்பட்டதோ, அந்தச் சட்டங்களைத் தனது தேர்தல் செல்லும் என்று சொல்லத்தக்க வகையில் மாற்றி அமைத்துக் கொண்டார்.

11. மேற்குவங்க காங்கிரஸ்கட்சி முதலமைச்சராக இருந்த சித்தார்த்த சங்கர்ரே என்பவருடன் மட்டுமே இந்திரா காந்தி ஆலோசனைகளை நடத்தினார். இந்தியாவின் அனைத்து ஊடகங்களின் தகவல் தொடர்பு, மின்சாரம் துண்டிக்கப்பட வேண்டும் என்று இந்திரா வலியுறுத்தியதை சித்தார்த்த சங்கரே ஏற்கவில்லை,குடியரசுத் தலைவரும் ஏற்கவில்லை.

12.நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தையும் ஆறு ஆண்டுகள் என்று அதிகரித்துக் கொண்டு தேர்தலைத் தள்ளிவைத்து உத்தரவிட்டார். 42ஆவது அரசியல் சட்டத் திருத்தம் என்ற பெயரால் மாநில அதிகாரங்களைப் பறித்து, தன் கையில் வைத்துக்கொண்டு முழுச் சர்வாதிகாரியானார்.

# அவசர நிலையை எதிர்த்து வீதிக்கு வந்த கலைஞர்

★ 1975 ஜூன் 25-ம் தேதி அவசர நிலையை பிரகடனப்படுத்தினார் இந்திரா காந்தி. எமர்ஜென்சி காமராசரையும் கலைஞரையும் ஒன்று சேர்த்தது. இருவரும் வெவ்வேறு காலங்களில் இந்திரா காந்தியை ஆதரித்ததற்கு இன்று நாடு விலை கொடுக்கிறது என கலைஞரிடம் கூறினார் காமராசர்.

★ எமர்ஜென்சி காலத்தில் பத்திரிகைகள் கடும் தணிக்கைகளுக்கு உள்ளாகின. எமர்ஜென்சிக்கு எதிராக காமராசரின் கருத்துக்களை முரசொலியில் வெளியிட்டார் கலைஞர். காமராசரின் கருத்துக்கள் முரசொலியில் முதல்முதலாக வெளியானது அப்போதுதான்.

★ சென்னை கடற்கரையில் பல லட்சம் மக்களைத் திரட்டி அனைவரையும் அவசரநிலை பிரகடனத்திற்கு எதிராக உறுதி ஏற்க வைத்தார் கலைஞர்.

★ மத்திய தகவல் தொடர்புத் துறை 'விடுதலை, முரசொலி' ஏடுகளை தணிக்கை செய்தது. அகில இந்திய வானொலியில் தலைமை செய்தியாளராக இருந்து ஓய்வு பெற்ற சங்கராச்சாரி சீடர் சவுமி நாராயணன் என்ற பார்ப்பனர், 'விடுதலை முரசொலி' ஏடுகளின் தணிக்கை அதிகாரியாக இருந்தார். “அண்ணாவை பெற்ற தாயை விட நேசிக்கிறேன்” என்று கலைஞர் எழுதிய வாசகத்தை அந்த பார்ப்பனர் முரசொலியில் நீக்கியவுடன் கோபத்தின் உச்சத்திற்கு சென்றார் கலைஞர். உடனே தொண்டர்களுடன் வீதிக்கு வந்தார். அண்ணா சாலையில் இருந்து ஊர்வலமாக வந்து தணிக்கை அலுவலகம் முன் உண்ணாவிரதம் நடக்கும் என்று அறிவித்தார். மூன்று கிலோ மீட்டர் தூரம் அந்த ஊர்வலம் சென்றது. காவல்துறை ஊர்வலத்தில் பங்கேற்றவர்களை கைது செய்தது. நான்கு மணி நேரம் நடந்த அந்தப் போராட்டம் தான் இந்தியாவிலேயே அவசர நிலைக்கு எதிராக நடந்த முதல் மக்கள் திரள் போராட்டம்.

★ 'முரசொலி' நாளேட்டில் பத்திரிகை தணிக்கைத் துறையை கேலி செய்யும் எட்டு கால தலைப்புச் செய்திகளை இரண்டு நாள் தொடர்ச்சியாக கலைஞர் வெளியிட்டார். ”வெண்டைக்காய் உடலுக்கு நல்லது, விளக்கெண்ணை உடல் சூட்டைத் தணிக்கும்” என்று வெளிவந்த அந்தத் தலைப்புச் செய்திகளை வெளியிட்டு பரபரப்பை உருவாக்கினார். 'முரசொலி' ஏட்டில் கார்ட்டூன் வரைந்து வந்த செல்லப்பா இந்திரா காந்தியை ஹிட்லராக சித்தரித்து கார்ட்டூன் வரைந்ததற்காக அவரது கார்ட்டூன் தடை செய்யப்பட்டது. நியூஸ்வீக்' ஆங்கில பத்திரிக்கை இந்தக் கார்ட்டூனை மறுவெளியீடு செய்தது. தொடர்ந்து தணிக்கைத் துறை செல்லப்பா கார்ட்டூன் வரைவதற்குத் தடை விதித்தது. பிறகு கலைஞரே கார்ட்டூன்களை வரையத் தொடங்கினார்.

★ மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்ட திமுக தோழர்களின் பட்டியலை முரசொலியில் வெளியிட தணிக்கைத் துறை அனுமதி மறுத்தது. அப்போது அண்ணா நினைவு நாள் வந்தது, 'அண்ணா நினைவிடத்திற்கு மலர் வளையம் வைப்பதற்கு வர இயலாத தோழர்கள்' என்ற தலைப்பிட்டு கலைஞர் கைதானவர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டார்.

★ அவசர நிலை பிறப்பித்தப் பிறகு தமிழ்நாட்டில் ஏழு மாதங்கள் திமுக ஆட்சியே நடந்தது. அப்போது பாதுகாப்புக்காக தமிழ்நாட்டுக்கு அடைக்கலம் தேடி பல வட மாநிலத் தலைவர்கள் வந்தார்கள். கலைஞர் அவர்களை பாதுகாத்தார், அவர்களில் ஒருவர் சோசலிஸ்ட் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்.

★ 1976 ஜனவரி 31 அன்று ஒரு பள்ளி விழாவில் பேசிய முதல்வர் கலைஞர் தமிழகத்தின் முதல்வர் என்ற முறையில் இதுவே எனது கடைசி பேச்சாக இருக்கலாம் என்றார். விழா முடிந்து திரும்புவதற்கு முன்பு ஆட்சி கலைக்கப்படலாம் என்பதால் அடைக்கலம் தேடி வந்த பெர்னாண்டஸை தமிழ்நாட்டை விட்டு பாதுகாப்பாக வேறு மாநிலத்திற்கு சென்று விட ஆலோசனை கூறினார். கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்ட ஒரு மாத காலத்தில் பெர்னாண்டஸ் மேற்கு வங்கத்தில் கைது செய்யப்பட்டார்.

★ ஆட்சிக் கலைப்பு அறிவிப்பு வந்தவுடனே முதலமைச்சர் தொலைபேசி துண்டிக்கப்பட்டது.

# ‘ஜென்சி’களுக்கு முன்னோடி பெரியார்

பெரியாருக்கு டீசர்ட்டையும், ஜீன்ஸ் பேண்டையும் அணிவித்து ஓர் ஓவியர் தீட்டிய இளம் தோற்றத்துடனான ஓவியம் இன்று வரை ஏராளமாக பகிரப்படுகிறது. பெரியாருக்குப் போர்த்திய இளமைத் தோற்றம் அவரது சிந்தனைகளுடன் இணைந்து நிற்பதே இந்த ஈர்ப்புக்கு காரணம். உலகம் முழுதும் இளைஞர்களின் எழுச்சி தொடங்கியுள்ள காலம் இது. பொருளாதார நெருக்கடிகளும், வேலையில்லாத் திண்டாட்டமும், இளைஞர்களின் தன்னெழுச்சி உந்துதலுக்குக் காரணியாகி ஆட்சி மாற்றங்களை உருவாக்கி வருகின்றன. இந்திய அளவிலும் 'கரப்பான் பூச்சி ஜனதா கட்சி' கல்விக் கட்டமைப்பின் சீர்கேடுகளை எதிர்த்து களமிறங்கி இருக்கிறது. அரசியல் கட்சிகளின் எல்லைகளுக்கு அப்பால் நின்று தொடங்கி இருக்கிறது இந்த எழுச்சி. எனவேதான் இந்திய ஒன்றிய ஆட்சி இதை எதிர் கொள்வதில் திணறுகிறது.

கட்சிகளை அதிகார வலிமையால் ஒடுக்கியவர்கள் இளைஞர்கள் எழுச்சியை எதிர் கொள்ள இயலாது திணறுகிறார்கள். ஆதரவுக்கரம் நீட்டி அரவணைத்து இந்த எழுச்சியை பழமையை நோக்கி இழுத்துச் செல்லும் முயற்சிகளில் முனைப்புக் காட்டுகிறார்கள். பழமைகளைக் கட்டுடைத்து நவீனத்துவத்தை நோக்கி சமுதாயத்தை நகர்த்த விரும்பிய பெரியார் மாற்றங்களை ஒருபோதும் பின்னோக்கி இழுத்துச் செல்ல முடியாது என்றார்.



“எவ்வளவு மதவெறியரும் குரங்குப் பிடிவாதக்காரரும் இன்றைய வாழ்க்கையில் மாற்றம் அடைந்து கொண்டும் மாற்றத்தை ஏற்றுக் கொண்டும் தான் இங்கு வாழ்கின்றார்களே தவிர, தெய்வீகத்துக்கு தனது தத்துவத்திற்கு மாறுபட்டதென்று கருதி எதையும் விட்டுவிட்டு காட்டுக்குள் ஓடிப் போய்விடவில்லை, அல்லது தற்கொலை செய்து கொண்டு ஆண்டவனை அடைந்து விடவும் இல்லை”என்றார் பெரியார். மாற்றங்களை பின்னோக்கி இழுத்துச் செல்லமுடியாது.

சமூக மாற்றங்கள் நிகழாத வரை அவ்வப்போது ஏற்படும் அரசியல் மாற்றங்கள் நிலைத்திருக்காது என்ற உறுதிப்பாட்டுடன் அவர் பழமைகளைக் கட்டுடைத்து நவீன சமத்துவத்துக்கான கருத்துக்களை விதைத்தார். சுமார் 100 ஆண்டுகளுக்குமுன் சமூகத்தில் அதிர்ச்சி அலைகளை உருவாக்கிய அந்தச் சிந்தனைகள் இன்றைய சிந்திக்கும் இளம் தலைமுறையினரால் பின்பற்றப்படும் வரலாற்றுத் திருப்பத்தைப் பார்க்கிறோம். உதாரணத்திற்கு சிலவற்றைப் பட்டியலிட முடியும்.

‘இன்னார்க்கு இன்னார் என்றே தேவன் எழுதி வைத்தான் அன்றே’ என சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக கூறப்பட்ட திருமணத்தை பெரியார் கேள்வி கேட்டார். “மணமக்கள் தங்கள் வாழ்க்கை சவுகரியத்திற்காகச் செய்யும் ஒரு ஒப்பந்த ஏற்பாடுதான் திருமணம் என்று கூறிய பெரியார், இந்தத் திருமண அமைப்பே தேவையில்லை என்று கூறிய போது சமூகம் ஏற்கவில்லை. இப்போது திருமணம் செய்து கொள்ளாமலே இணைந்து வாழ்தல் (Living together) என்ற வாழ்க்கைக்கு இளைய தலைமுறை நகர்ந்து இருக்கிறது. நீதிமன்றங்களும் இதற்கு சட்ட அங்கீகாரம் வழங்கி உள்ளன.

விருப்பமில்லாத கட்டாய வாழ்க்கையில் இருந்து விலகிக் கொள்வதை பெரியார் வலியுறுத்தினார். ஒரு காலத்தில் சமூக அவமானமாக கருதப்பட்ட விவாகரத்துகள் இப்போது சமூகத்தின் இயல்பாகவே மாறிவிட்டது.

பெண்,ஆண் உடலுறவு இன்றி குழந்தைகள் பிறக்கும் காலம் வரும் என்றார் பெரியார். ‘கற்பு’ என்று பெண்கள் மீது மட்டும் திணிக்கப்பட்ட ‘புனிதத்தை’ கேள்வி கேட்ட பெரியார், ‘கற்பு’ ஆண்களுக்கு மட்டும் வேண்டாமா? என்றார். கற்பு என்ற ‘புனிதமே’ தமிழ்ப் பண்பாட்டின் பெருமைக்கான அடையாளம் என்ற பழமை கருத்தியல் இப்போது தகர்ந்து வருகிறது.

‘விந்துசேமிப்பு மய்யங்களும், கருத்தரிப்பு மய்யங்களும்’ ஏராளமாக வந்துவிட்டன. கருவை சுமக்கும் வாடகைத் தாய்கள் வந்து விட்டார்கள். மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு பணம் கட்ட முடியாத நிலையில் ஒரு மாணவி வாடகைத் தாயாக மாறி பணம் ஈட்டிய கதையுடன் ‘விசுவநாதன் அண்ட் சன்ஸ்’ என்ற திரைப்படம் அண்மையில் வெளிவந்த போது எதிர்ப்புகள் இல்லாத வெற்றிப் படமாகவே அது ஓடியது. அண்மையில் அமெரிக்காவில் டெக்சாஸ் மாநிலத்தில் ஈவ்வைலி என்ற பெண் தனது தாய்க்கு தனக்கான விந்துகொடை வழங்கியவரை தேடும் முயற்சிகளில் ஈடுபட்டு, அதற்காக சந்தித்த கடும் சவால்கள் உலகத்தின் கவனத்தை ஈர்த்த செய்தியாக மாறியது.

ஆண், பெண் உடைகளில் பாகுபாடுகளை எதிர்த்தார் பெரியார். புடவை கட்டும் பெண்களின் ஒரு கை எப்போதும் சரி செய்யவே பயன்படுவதை சுட்டிக்காட்டினார். இப்போது இளம் பெண்கள் புடவை, பாவாடை, தாவணி, சுடிதார் என்று மாறி வசதியான ஜீன்ஸ், டீசர்ட்-க்கு மாறிவிட்டார்கள். கிராமங்களிலும் பாவாடை, தாவணி விடைபெற்று சுடிதார் என்ற மாற்றம் நோக்கி நகருகிறது.

மறுமண உரிமையை வலியுறுத்திய பெரியார் கைம்பெண் (விதவை) கோலத்தை கடுமையாக எதிர்த்தார். சட்டங்கள் அனுமதித்தாலும் சமூகம் மாற்றங்களை ஏற்க மறுத்தது. ஜாதி பார்த்து நடந்த முதல் திருமணம், தோல்வியுற்றப் பிறகு, இரண்டாவது திருமணத்துக்கு வரன் தேடும் போது மணமகன் படித்தவனாக, நல்லவனாக இருக்க வேண்டும் எந்த ஜாதியானாலும் பரவாயில்லை என்று ஜாதிக்கு எதிராக ஜாதி ஆதரவாளர்களே பச்சைக் கொடி காட்டுகிறார்கள்.

கிராம, நகர பேதங்களை எதிர்த்தவர் பெரியார். பழமையின் பிடிக்குள் ஜாதியையும், பெண்ணடிமையையும் கட்டிக்காக்கும் கிராம அமைப்பு முறையை உடைத்து நகரமயமாக்க வேண்டும் என்றார் பெரியார். கிராமப் பெருமைகளின் மோகம் குறையத் தொடங்கி இந்தியாவிலேயே நகரமயமாதலில் முதல் இடத்தில் நிற்கிறது தமிழ்நாடு.

வீட்டுக்கு ஒரு சமயலறை வேண்டாம், பொது சமயலறை வேண்டும் என்றார் பெரியார். இளைய சமுதாயம் சமயலறையிலிருந்து மெல்ல விலகி ‘சுகிக்கும், ஜொமெட்டோவுக்கும்’ ஆன்லைன் ஆர்டர்களை ஆர்வத்துடன் போடுகிறது. பெண்களிடமிருந்து சமையல் கரண்டியைப் பிடுங்கி புத்தகங்களைக் கொடுங்கள் என்ற பெரியாரின் கூற்றை இளம் தலைமுறை பெண்கள் கவிதைகளாகவும் இலக்கியங்களாகவும் கொண்டாடுகிறார்கள்.

சமூகத்தையே அதிர்ச்சி அடையச் செய்த பெரியாரின் மற்றொரு கருத்து பிள்ளைப் பேறு வேண்டாம் என்பதாகும். படித்த இளம் தலைமுறையின் புரட்சிகர இணையர்கள் இந்தக் கருத்தை கொண்டாடி வருவதையும் சமூகத்தில் பார்க்க முடிகிறது.

“திருமணத்துக்கு முன்பு ஒரு பெண்ணும், ஆணும் சேர்ந்து பழகி ஒருவரையொருவர் அறிந்து கொண்டபிறகுதான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். பெண்களை ஆண்களோடு சாதாரணமாகப் பழகச் சொல்ல வேண்டும். அன்பு, குணம், பழக்க வழக்கம் இவைகள் உணர்ந்து பழகினால்தானே தெரியும்?” என்று 50 ஆண்டுகளுக்கு முன்பே பெரியார் கூறிய கருத்தை இளம் தலைமுறை இப்போது முழுமையாக பின்பற்றுகிறது. திருமணம் நிச்சயமாகிவிட்டால் அடுத்து திருமணம் நிகழ்கிற வரை மணமக்கள் சந்தித்துப் பேசவே கூடாது என்ற தடைகளை இளைய சமூகம் ஏற்கத் தயாராக இல்லை. கலந்து பேசவே விரும்புகிறது.

இளைய தலைமுறையின் எழுச்சியில் ஜாதி, மத அடையாளங்கள் காணமல் போகின்றன. பெண், ஆண் பேதங்கள் உடைகின்றன. கட்சி அமைப்புகளில் இவர்கள் அடைபடுவதும் இல்லை. இவையெல்லாம் தொலைநோக்கு பார்வையோடு பெரியார் இளைய சமுதாயத்திற்கு முன்வைத்த சிந்தனைகள்தான். இந்தச் சமூக மாற்றங்கள் கடவுள்,மத, சடங்கு, சம்பிரதாய நம்பிக்கையில் ஆழமாக ஊறிபோய் உள்ள சமூகத்தை உள்ளடக்கி பயணிக்கத் தொடங்கிவிட்டன என்பதுதான் இதில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

-விடுதலை இராசேந்திரன்

(புதிய தலைமுறை இணைய இதழுக்கு எழுதிய கட்டுரை)

# நீதித்துறையில் பார்ப்பன ஆதிக்கம் முன்னாள் நீதிபதி மனம் திறக்கிறார்.

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி தீபக் குப்தா இணையதளம் ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில், “அண்மையில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் உயர் ஜாதியினராகவே உள்ளனர். நீதிபதிகளாக நியமிக்க மற்ற ஜாதிகளிலும் மதங்களிலும் திறமையானவர்கள் இல்லையா? நான் நியமனங்கள் குறித்து சந்தேகம் கிளப்ப விரும்பவில்லை; ஆனால், நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் அனைத்து சமூக மக்களின் பிரதிநிதித்துவமும் இருப்பது அவசியம்.

நீதிபதிகளை நியமிக்கும் கொலீஜியம் முறை எவ்வித வெளிப்படைத்தன்மையும் இன்றி முழுமையாகத் தோல்வியடைந்துவிட்டது. நீதித்துறையில் நேர்மையற்ற ‘கருப்பு ஆடுகளின்’ எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. “ஜாமீன்தான் விதி, சிறை என்பது விதிவிலக்கு” என்ற அடிப்படை சட்டக் கோட்பாடு இன்று முற்றிலும் தலைகீழாக மாறிவிட்டது.

உமர் காலித் போன்றவர்கள் எவ்வித விசாரணையும் இன்றி ஆறு ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதும், சோனம் வாங்சுக் விவகாரத்தில் ஆட்கொணர்வு மனுவை நீதிமன்றம் கையாண்ட விதமும் தனிமனித சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதைக் காட்டுகின்றன. அனைத்து மட்டங்களிலும் உள்ள நீதிமன்றங்கள் பெரும்பான்மை வாதத்தை நோக்கி நகர்ந்து வருவது ஜனநாயகத்திற்கு விடப்படும் மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். ஞானவாபி மசூதி வழக்கில் தொல்லியல் துறை ஆய்வுக்கு அனுமதி அளித்ததும், கங்கை நதியில் அசைவம் சாப்பிட்ட சிறுபான்மையினருக்கு பல மாதங்களாக ஜாமீன் மறுக்கப்பட்ட நிலையில், அதே நதியில் மது அருந்திய பெரும்பான்மையினருக்குச் சில மணிநேரங்களில் ஜாமீன் வழங்கப்பட்டதும் நீதிமன்றங்களின் பாரபட்சத்தைக் காட்டுகிறது. அடிப்படை உரிமைகள் அப்பட்டமாக மீறப்படும்போது நீதிமன்றங்கள் வெறும் மவுனப் பார்வையாளர்களாக மாறிவிட்டன. நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கை குறைவது ஜனநாயகக் கட்டமைப்பிற்கே சாவுமணியாக அமையும் இவ்வாறு அவர் எழுதியுள்ளார்.

# பெரியார் பற்றாளர் சாலமன் பாப்பையா முடிவெய்தினார்.

மறைந்த பெரியார் தொண்டர் சாலமன் பாப்பையா (91) “ஜாதி, மத கோட்பாடுகளில் இருந்து விலகி எப்பவும் பெரியார் கொள்கைப்படி வாழ்வதால் தனது உடலை அடக்கம் செய்யாமல், எரியூட்ட வேண்டும் என உயில் எழுதி வைத்துள்ளார் - என்று பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் உதவியாளர் ராஜா சன்நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். கிறித்துவ மத சடங்குகளில் உடலை அடக்கம் செய்வதே மரபு.

பெரியார் திராவிடர் கழகம் ‘குடி அரசு’ தொகுப்புகளை வெளியிட்ட போது



தன்னிடம் இருந்த ‘குடிஅரசு’ இதழ்களை வழங்கி உதவியவர். அண்ணாவின் ’வேலைக்காரி’ திரைப்படத்தை பார்த்த பிறகு தீவிர திராவிட இயக்க ஆதரவாளராக மாறியதை சன்நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் பதிவுசெய்துள்ளார்.

தமிழறிஞர் சாலமன் பாப்பையாவின் உடலுக்கு அரசு மரியாதை அளிக்கப்பட்டு, மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் புகழ் வணக்கம் செலுத்துகிறோம்.

# அவசர நிலையில் அஞ்சி நடுங்கிய ஆர்.எஸ்.எஸ்

***மு.க.ஸ்டாலின் மிசாவில் கைதாகவில்லை என்ற கற்பனையை திட்டமிட்டு பரப்பி வருவது ஆர்.எஸ்.எஸ். அஇஅதிமுக மா.பா. பாண்டியராஜன் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இதே கதையை அவிழ்த்து விட்டார். அப்போது ஆதாரப்பூர்வமாக மறுக்கப்பட்டது. பிறகு பாஜக அண்ணாமலை இதே பொய்யைப் பரப்பினார்; எடுபடவில்லை. இப்போது தவெகவில் இருந்து ஆர்.எஸ்.எஸ்-காரர் நிர்மல்குமார் இந்தப் பொய்யைச் சட்டமன்றத்தில் பேசியுள்ளார். ஆர்.எஸ்.எஸ் 'வீராதி வீரர்கள்' அவசர நிலை காலத்தில் எப்படி சரணடைந்தார்கள்?***

*1975 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் தேதி அவசர நிலைப் பிரகடனம் வெளிவந்தது. ஏற்கெனவே பல வெளிநாடுகளில் "பாரதிய சுயம் சேவக் சங்" என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளை அங்கு குடிபுகுந்த பார்ப்பனர்களைக் கொண்டு இவர்கள் துவக்கியிருந்தார்கள். அவசரநிலைப் பிரகடனம் வர இருக்கிறது என்பதை பார்ப்பன உயர் அதிகாரிகள் மூலம் ரகசியமாக முன் கூட்டியே தெரிந்துகொண்டு பலர் வெளிநாடுகளுக்கு ஓடினார்கள். ஏராளமான ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், அதிலிருந்து விலகிக் கொள்வதாக ராஜினாமா கடிதங்களையே அனுப்பி வைத்தார்கள்.*

*சஞ்சய் காந்தியின் இளைஞர் காங்கிரசிலே ஏராளமாக ஊடுருவினர். இதைப் பிரதமர் இந்திரா காந்தி பலமுறை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு இருக்கிறார். இந்திராகாந்தியின் நெருக்கமான சகாக்கள் பார்ப்பனர்கள் தான்! ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் பெரும்பாலும் பார்ப்பனர்கள் தான்! எனவே அவசர நிலை காலத்திலே எதிர் எதிர் முகாமிலே இருந்தாலும் பார்ப்பனர்கள் இனப்பாலம் வழியாக அவர்கள் இணைந்து நின்றனர். மத்தியப் பிரதேச ஆர்.எஸ்.எஸ் தலைவர் சக்லேச்சா, அவசர நிலையில் 19 மாதகாலம் பரோல் விடுதலையில் வெளியே இருந்தார் என்றால் அதற்குக் காரணம் என்ன? இந்த ரகசிய பூணூல் பாசம்தான்! புனேயிலிருந்து வெளிவந்த ஆர்.எஸ்.எஸ் ஆதரவு நாளேடான "தாருண்பாரத்" - இந்திராவின் மகனும், இளைஞர் காங்கிரஸ் தலைவருமான சஞ்சய் காந்தியை தலைமீது தூக்கி வைத்து புகழ்ந்து கொண்டிருந்தது.*




*மராட்டிய மாநிலம் ஏர்வாடா சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆர்.எஸ்.எஸ் கைதிகளிடம் கீழ்க்கண்ட அச்சடிக்கப்பட்ட விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. அதிலே கையெழுத்துப் போடுவதற்கு அந்த " வீராதி வீரர்கள்" போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தனர். இதோ அந்தப் படிவத்தின் நகல்:*

***Sri... Detenu class... Prison agress on affidavit that in case of my release, I shall not do anything which is detrimental to internal security and public peace. Similarly, I shall not do anything which would hamper the distribution of essential goods. So also I shall not indulge in any activities which is prejudicial to the present emergency.***

*தடுப்புக்காவல் கைதியாக நான் தரும் பிரமாண பத்திரம் இது. நான் விடுதலை செய்யப்பட்டால், உள்நாட்டு பாதுகாப்பையோ பொது அமைதியையோ குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன். அதேபோல் அத்தியாவசியப் பொருள் விநியோகத்தைத் தடுக்கும் எந்த முயற்சியிலும் ஈடுபட மாட்டேன். அதோடு, எந்த சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட மாட்டேன். தற்போதுள்ள அவசர நிலை பிரகடனத்துக்கு எதிராக எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டேன் இதுதான் அந்த மன்னிப்பு சாசனம். மராட்டிய அரசு இப்படி எழுத்துப் பூர்வமான மன்னிப்பைக் கோரியபோது R.S.S.காரர்கள் அவரவர் சொந்த முடிவோடு இதில் கையெழுத்துப்போட போட்டி போட்டு முன்வந்தனர். அதே சிறையில் இருந்த சோஷலிஸ்டுகளான பக்திகார், பாபுராவ் சாமந்த், தசரத்பட்டில் போன்றவர்கள் இதை எதிர்த்தனர். ஜனசங்கத் தலைவர் - மால்கி (Mhalg) யை சிறையில் சந்தித்து உங்கள் கட்சிக்காரர்களை, மன்னிப்புக் கேட்காமல் இருக்கச் செய்யுங்கள் என்று சோஷாலிஸ்ட் கட்சியினர் வற்புறுத்தினார்கள். அதற்கு அந்த ஜனசங்கத் தலைவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?*

**மன்னிப்புக் கடிதங்களை சிறையில் கைதான ஏராளமான ஆர்.எஸ். எஸ்காரர்கள், சிறை அதிகாரிகளிடம் அளித்தனர். கைது செய்யப்படாதவர்கள், அதிலிருந்து தப்பிக்க தங்களுக்கும் ஆர்.எஸ்.எஸ் ஜனசங்கத்துக்கும் ஒரு தொடர்பும் கிடையாது என்று அறிவித்தனர்.**

*"இது ஆர்.எஸ்.எஸ். பெருந்தலைவர்கள் எடுத்திருக்கும் முடிவு. எங்கள் ஜனசங்கம் இதில் ஒன்றும் செய்ய முடியாது" என்பதுதான்! இதிலே மிகவும் பரிதாபம் என்னவென்றால் - மன்னிப்புக் கடிதம் எழுதிய எல்லா ஆர்.எஸ். எஸ்.காரர்களும் விடுதலை செய்யப்படவில்லை ஒரு சிலர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் அதே சிறையில் இருந்த சோஷலிஸ்ட் தலைவர்கள் - இந்த மன்னிப்புக் கடிதத்தில் கையெழுத்துப் போட மறுத்தது மட்டுமல்ல; இப்படி ஒரு அரசு கேட்பதே தங்களை அவமானப்படுத்தியதாகும் என்று மராட்டிய முதல்வருக்கு கண்டனம் தெரிவித்து கடிதமே எழுதினார்கள். ஆனால் வெளியே இருந்த ஆர்.எஸ்.எஸ். ஜனசங்க போராட்டக் கமிட்டி எடுத்த முடிவு - மன்னிப்புக் கடிதத்தில் கையெழுத்தே போடக் கூடாது என்பதுதான். எஸ்.எம். ஜோஷி மூலம், சிறையில் இருக்கும் ஆர்.எஸ்.எஸ். காரர்களிடம் இந்தத் தகவல் சொல்லி அனுப்பப்பட்டாலும் அந்த 'வீராதி வீரர்கள்' அதற்கு செவிசாய்க்க தயாராக இல்லை எதைச் செய்தாவது வெளியே போய்விட வேண்டும் என்று துடித்தார்கள். இதை நாம் - இவ்வளவு விரிவாக எடுத்துக்காட்டி இருப்பதற்குக் காரணம் அவசர நிலையை எதிர்ப்பதிலே முன்னணியில் நின்ற மாவீர்ரகள் நாங்கள் தான் என்று ஆர்.எஸ்.எஸ் தலைவர் தேவரஸ் மார்தட்டுவதனால் தான்!*

*இவ்வளவுக்கும் பிறகு - ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன், தேவரஸ் அவசர நிலையை ஒழித்துக்கட்டிய மாவீரர் போல நாடு முழுதும் பவனி வந்தார். ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் "வீரத்திலகமிட்டு" "ஆரத்தி" எடுத்து வரவேற்புகளைக் கொடுத்தார்கள். ஆர்.எஸ்.எஸ் தலைவர் தேவரஸ் அவசரநிலை காலத்தில் எப்படிப்பட்ட "வீரராக விளங்கினார் தெரியுமா? தேவரஸ் அடைக்கப்பட்டிருந்த - அதே சிறையில் பாபா ஆதவ் என்ற மராட்டிய சோஷலிஸ்ட் தலைவரும் அடைக்கப்பட்டிருந்தார். சிறைக்குள்ளே இந்த வீராதி வீரர்கள் - என்ன பாடுபட்டார்கள் என்பதை பாபா ஆதவ் படம் பிடித்துக்காட்டுகிறார்:*

*"உள்ளே வந்த பல ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், தாங்கள் அவசர நிலையை எதிர்க்கவே இல்லை என்றும், ஜெ.பி. இயக்கத்தில் பங்கு பெறவே இல்லை என்றும் கூறிக்கொண்டிருந்தனர். உண்மையைச் சொல்லப் போனால், பல ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் அவசரநிலைப் பிரகடனம் செய்ததை ஆதரித்தனர்! ஜெ.பி. ராணுவத்தையே பிளவுபடுத்த முயலலாமா என்று ஜெ.பி. மீது குற்றம் சாட்டினர்." என்று எழுதுகிறார்! தேவரஸ் கதையையும் அவர் வெட்ட வெளிச்சமாக்கினார்!.*

*ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள் அவசரநிலைக்கு அடிபணியவில்லை என்று தேவரஸ் இப்போது கூறுவது ஆச்சரியமாக இருக்கிறது. நானும் ஏர்வாடா சிறையில் தான் இருந்தேன். உள்ளே என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும்; தேவரஸ் இந்திரா காந்தியோடும், வினோபாவுடனும், மராட்டிய முதலமைச்சர் எஸ்.பி.சவானுடனும், சஞ்சய் காந்திக்கு நெருக்கமானவர்களுடனும் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். 1976ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்திரா பம்பாய் வந்தார். அப்போது இந்திராவை சந்திப்பதற்காக தேவரஸ் சிறையிலிருந்த தன்னை பம்பாய் மருத்துவமனையில் அனுமதித்துக் கொண்டார். வெளியில் இருந்த ஜனசங்க எம்.எல்.ஏ. ஒருவர் இந்த ஏற்பாடுகளை -தேவரஸ் உத்தரவுப்படி செய்தார். எஸ்.பி.சவான் மூலம் இந்திராவை சந்தித்துவிட ஏற்பாடுகள் செய்தும், முயற்சி பலிக்கவில்லை. என்று பாபா ஆதவ் எழுதுகிறார். (ஆதாரம்: டி.ஆர் கோயல் எழுதிய "R.S.S." நூல்) இவரும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் செயல்பட்டு பிறகு விலகியவர். அவசரநிலை காலத்தில் இவர்கள் 'அந்தர்பல்டி' அடித்த விவகாரங்களை அடுக்கடுக்காக நம்மால் - ஆதாரங்களோடு சுட்டிக்காட்ட முடியும்.*

*இந்திராவை நாங்கள் தான் தீரத்தோடு எதிர்த்தோம் என்று அவர்கள் மீசை முறுக்கியபோது, ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான மதுலிமாயி -பேனாவைத் தூக்கினார். இந்த பொய்யர்களின் முகமூடிகளை சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தார். மதுலிமாயி அவர்கள் எழுதிய அக்கட்டுரை - இந்த வீரர்களின் சுயரூபத்தை தெளிவாகப் படம்பிடித்துக் காட்டிவிட்டது! அதிலிருந்து ஒரு சில பகுதிகளை - இங்கே நாம் எடுத்துக்காட்டினால் வீரத்தின் உறைவிடங்கள் சோரம் போன சோகங்களின் கதை தெரியவரும்; இதோ மதுலிமாயி கட்டுரை*

*"அவசரநிலை எதிர்ப்புப் போர்க்களத்தில் - முன்னணியில் நின்றதாக ஆர்.எஸ்.எஸ்-காரர்கள் கூறுவதில் உண்மையே இல்லை! ஆர்.எஸ்.எஸ் தடை செய்யப்பட்டவுடன் நடுங்கிப் போனார்கள். மன்னிப்புக் கடிதங்களை சிறையில் கைதான ஏராளமான ஆர்.எஸ்.எஸ்காரர்கள், சிறை அதிகாரிகளிடம் அளித்தனர் கைது செய்யப்படாதவர்கள், அதிலிருந்து தப்பிக்க தங்களுக்கும் ஆர்.எஸ்.எஸ் ஜனசங்கத்துக்கும் ஒரு தொடர்பும் கிடையாது என்று அறிவித்தனர். அழுத்தமான கொள்கைப் பற்றுள்ள தொண்டர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களின் நிலை இப்படித்தான் இருந்தது. இந்திராவின் தேர்தல் செல்லாது என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தவுடன் - வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு, அப்பீல் செய்து சட்டத்தையே திருத்தி சுப்ரீம் கோர்ட்டு வழக்கில் இந்திரா வெற்றி பெற்றபோது இந்திராவுக்கு பாராட்டு செய்தி அனுப்பியவர்தான் ஆர்.எஸ்.எஸ் தலைவர் தேவரஸ். தங்களின் சார்பாக தொடர்ந்து இந்திராவை சமாதானப்படுத்த தூதர்களை அனுப்பிக்கொண்டே இருந்தனர்.*

*பொதுத்துறை நிறுவனங்களுக்கு எதிராக சஞ்சய் காந்தி கருத்துகளைத் தெரிவித்தபோது அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சஞ்சய் காந்தியை புகழ ஆரம்பித்துவிட்டனர் ஆர்.எஸ்.எஸ். ஆதரவுப் பத்திரிகைகள் அரசாங்கத்திடம் சரணாகதியாகி, இந்திரா காந்தியைப் பற்றி புகழ்ந்து எழுதித் தள்ளின. எங்களுக்கும் ஜெ.பி.யின் முழுப்புரட்சி இயக்கத்துக்கும் ஒரு தொடர்பும் கிடையாது என்று திரும்பத் திரும்ப அறிவித்துக்கொண்டே இருந்தனர். இன்னும் ஒரு படி மேலே போய் ஜெ.பி.யைக் கண்டிக்கவே ஆரம்பித்தனர்.*

*போலீசார், ராணுவத்தினர் தவறான அரசு உத்தரவுகளை செயல் படுத்தக்கூடாது என்று ஜெ.பி. கூறிய கருத்துகளைக் கண்டித்து அதைத் தாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த பிரமாண வாக்கு மூலத்திலேயே குறிப்பிட்டிருந்தனர். இவ்வாறு இந்த மாவீரர்களின் வீரத்தை மதுலிமாயி பட்டியல் போட்டுக்கொண்டே போகிறார். (மதுலிமாயி எழுதிய இந்தக் கட்டுரை "Secular Democracy 1979 மார்ச் இதழில் வெளி வந்திருக்கிறது). ஏர்வாடா சிறையிலிருந்து - ஆர்.எஸ்.எஸ். தலைவர் தேவரஸ் பிரதமர் இந்திராவுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். 10.11.1975 இல் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தின் வாசகமே இப்படித்தான் துவங்குகிறது.*

***"Let me congratulate you as five judges of the Supreme Court have declared the validity of your election".***

*'சுப்ரீம் கோர்ட்டின் 5 நீதிபதிகள் உங்கள் தேர்தலை செல்லும் என்று அறிவித்ததற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கடிதத்தைத் துவக்கி தாங்கள் ஒரு குற்றமும் இல்லாத நிரபராதிகள், அப்பாவிகள் என்பதை கடிதம் முழுதும் விளக்கிவிட்டு - இறுதியில் எங்களை விடுதலை செய்தால் உங்கள் பணிகளுக்கு முழு சேவை செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற அடிமை சாசனத்தையும் எழுதித் தருகிறார்.*

***"Set free thousands of R.S.S.workers and remove the restrictions on "Sangh" If done so, power of self-less work on the part of lakhs of R.S.S.volunteers will be utilised for national upliftment (Government as well as non-Govemment) and, we all wish, our country will be prosperous."***

*ஆர்.எஸ்.எஸ் மீதான தடையை நீக்கி ஆர்.எஸ்.எஸ்.காரர்களை விடுதலை செய்யுங்கள். லட்சோப லட்சம் ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள் தன்னலமற்ற சேவையை நாட்டின் முன்னேற்றத்துக்கு (அரசாங்கத்தில் பணிகளுக்கானாலும் அரசு சார்பில்லாத பணிகளுக்கானாலும்) பயன் படுத்திக் கொள்ளமுடியும்."*

*தேவரஸ் அதோடு நிற்கவில்லை; ஆச்சார்ய வினோபாவுக்கு இரண்டு கடிதங்களை எழுதுகிறார். முதல் கடிதம் 12.1.76 இல் எழுதுப்படுகிறது. அதற்கு பதில் இல்லை; எனவே இரண்டாவது கடிதத்தை "பம்பாய் - ஜார்ஜ் மருத்துவமனை கைதிகள் வார்டு எண். 14" என்ற முகவரியிலிருந்து எழுதுகிறார். "பிரதமர் இந்திரா 24 ஆம் தேதி உங்களை ஆசிரமத்தில் சந்திக்க இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அப்போது பிரதமரிடம் எப்படியாவது எடுத்துச்சொல்லி, எங்களை விடுவிக்க வழி செய்யுங்கள். பிரதமரின் தலைமையிலேயே நாங்கள் பாடுபடத் தயாராக இருக்கிறோம் (The volunteers will participate in the planned programme of action under the leadership of Prime Minister) என்று எழுதுகிறார். இதுதான் ஆர்.எஸ்.எஸ் அவசரநிலையை எதிர்த்த 'வீரம்'.*

***(ஆதாரம்: விடுதலை இராசேந்திரன் எழுதிய 'ஆர்.எஸ்.எஸ் ஓர் அபாயம்' நூலிலிருந்து)***

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# பாரிஸில் பெண்களை அவமதித்த இந்து சாமியார்களுக்குக் கடும் எதிர்ப்பு

செப்டம்பரில் பாரிஸ் அருகே பிரான்சின் முதல் பெரிய இந்து ஆலயம் திறக்கப்படவுள்ளது என்று கடந்த சில நாட்களாகவே பெரிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டது. பாரிஸ் அருகிலுள்ள புஸ்ஸி செயின்ட் ஜார்ஜஸ் பகுதியில் அமைந்துள்ள போச்சசான்வாசி அக்ஷர் புருஷோத்தம் சுவாமிநாராயண் சன்ஸ்தா (BAPS)வின் சுவாமிநாராயண் இந்துக் கோயில் திறக்கப்படுவதையொட்டி, 2026 செப்டம்பர் 2 முதல் 14 வரை, 13 நாள் ‘கலாச்சாரத் திருவிழா’வுடன் கொண்டாட்டங்கள் இருப்பதாகவும் பெரிதாக விளம்பரப்படுத்தினார்கள். அதன் ஒரு பகுதியாக செப்டம்பர்-3 அன்று பாரிஸில் உள்ள செய்ன் நதியில் நடைபெறவிருந்த படகு ஊர்வலத்திற்கு முன்னதாக, ஈபிள் கோபுரத்திற்கு முன்பாக நடைபெற்ற மதச் சடங்கில் அந்த அமைப்பைச் சேர்ந்த துறவிகள் பங்கேற்றனர். பிறகு செப்டம்பர் 5-ஆம் தேதி அன்று அந்த அமைப்பைச் சேர்ந்த சுமார் 100 பேர் கொண்ட குழுவினர் ஈபிள் கோபுரத்தைப் பார்வையிடச் சென்றனர். அப்போது அந்தக் கோபுரத்தை நிர்வகித்துவரும் ஈபிள் கோபுர நிர்வாக நிறுவனத்தாரிடம் அங்கு பணியில் உள்ள பெண்களை, இந்தத் துறவிகளின் கண்களில் படாமல் ஒதுங்கியிருக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுள்ளனர். அதற்கு அந்த நிறுவனமும் ஒப்புக் கொள்ளவே, பல பெண்கள், ஈபிள் கோபுரத்தின் பல பணிகளில் இருந்தும், குறிப்பிட்ட நேரத்துக்குப் பெண்களை மாற்றுப் பணிகளுக்கு அனுப்பியும், ஓய்வுக்கு அனுப்பியும் அலைக்கழிக்கப்பட்டனர்.

தங்கள் பணியிடத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அவமதிப்பைக் கண்டு ஈபிள் கோபுரப் பணியாளர்கள் சங்கத்தினர் கொதித்தெழுந்தனர். ஒரு நாள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டதால், ஈபிள் கோபுரம் ஒரு நாள் மூடப்படும் நிலை உருவானது. இது பிரான்சில் பலத்த எதிர்ப்பலையைத் தோற்றுவித்துள்ளது. பெண்கள் அவமானப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள பணியாளர் சங்கப் பிரதிநிதியான டயானா டெய்வோன் “இது ஊழியர்களிடமும், குறிப்பாகப் பெண்களிடமும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது; நடந்த சம்பவங்களாலும், சிலர் நடத்தப்பட்ட விதத்தாலும் அவர்கள் அனைவரும் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்கிறார்கள்” என்றும் தெரிவித்துள்ளார். “இந்த அதிர்ச்சியான செய்தி, கண்டனத்திற்குரியது” என்று பாரிஸ் நகர மேயரும், ஈபிள் கோபுர நிறுவனத்தின் தலைவருமான ஏரியல் வீல் தெரிவித்துள்ளார்.

இது குறித்துக் கண்டனம் எழுந்ததும், “எங்களது சாதுக்களுக்கு எட்டடுக்கு பிரம்மச்சரிய ஒழுக்கம் உள்ளது. அதில் பெண்களுடன் பேசுதல், தொடர்பு கொள்ளுதல், அவர்களுடன் நெருக்கமாக இருப்பது போன்றவை தவிர்க்கப்பட வேண்டியவையாகக் குறிப்பிடப்படுகின்றன. இது பெண்களை இழிவுபடுத்துவதற்கான கொள்கை அல்ல; சாதுக்களின் ஆன்மிக ஒழுக்கம் என்று போச்சசான்வாசி அக்ஷர் புருஷோத்தம் சுவாமிநாராயண் சன்ஸ்தா கருதுகிறது” என்று விளக்கம் அளித்திருக்கிறார்கள் அந்தக் குழுவினர். ”யாரும் புண்பட்டிருந்தால் வருந்துகிறோம்” என்று அறிவிப்பும் செய்திருக்கிறார்களாம்.

பாரிஸில் இந்தக் கோயிலைத் திறந்து வைத்தவர் பிரதமர் மோடி. பெண்களைப் பார்த்தாலே தீட்டு என்று கருதக்கூடிய ஒரு பார்ப்பன அமைப்புக்கு பிரதமர் குஜராத்திக்காரர் என்பதற்காக ஆதரவு தருகிறார்.

உலகப் புகழ் பெற்ற ஈபிள் கோபுரத்தில் இந்து தர்மத்தின் ‘பெண்கள் தீண்டாமையைத்’ திணிக்க முயல்வது வெட்கக்கேடானது. அதில் பணியாற்றும் பெண்கள் தங்கள் கண்டனத்தை வெளிப்படுத்தி உள்ளனர் ஒருநாள் ஈபிள் கோபுரம் மூடப்பட்டது.

# நேபாள வெள்ளத்துக்கும் மூடநம்பிக்கை கதை

அண்மையில், நேபாளத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய வெள்ளத்தின் போதும் கதை கட்டத் தொடங்கினார்கள். நேபாளத்தின் பஞ்சகல் பகுதியில், பலஞ்சோக் பகவதி அம்மன் கோவில் இருக்கிறதாம்! கடந்த ஆகஸ்ட் 22-ஆம் தேதி மாலை நேரத்தில் பூஜைகள் நடந்தபோது, பகவதி அம்மன் சிலையில் வியர்வைத் துளிகள் போன்ற ஈரப்பதம் இருந்ததைப் பக்தர்கள் கவனித்தார்களாம். பொதுவாக இந்த அம்மன் சிலைக்கு வியர்த்தால், ஏதோ ஒரு பெரிய இயற்கை பேரிடரோ, நெருக்கடியோ ஏற்படப்போகிறது என்பது உள்ளூர் மக்களின் நீண்டகால நம்பிக்கையாம்! இதனால் அசம்பாவிதங்கள் ஏதும் நடக்காமல் இருக்கத் தெய்வத்திடம் மன்னிப்பு கோரும் வகையில் கோவிலில் உடனடியாகப் பூஜை நடத்தியுள்ளனர். சிலைக்கு வியர்த்ததாகக் கூறப்பட்ட நிகழ்வு நடந்து, சரியாக நான்கு நாட்களுக்குப் பிறகு, அதாவது ஆகஸ்ட் 26-ஆம் தேதி, நேபாளத்தில் பயங்கரமான திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாம்! சரி, பரிகாரப் பூஜைகள் செய்தார்களே அதற்குப் பலன் என்ன கிடைத்தது? யோசிக்க வேண்டாமா?

எவரெஸ்டில் பனிப்பாறைகள் உருக மனிதச் சிறுநீரும் ஒரு காரணம் என நேபாள, அமெரிக்கா நாடுகளைச் சேர்ந்த அறிவியல் அறிஞர்கள் ஆய்வில் அதிர்ச்சித் தகவல் கிடைத்துள்ளது.

‘ரீஜனல் என்விரான்மெண்டல் சேஞ்ச்’ இதழில் வெளியிடப்பட்டுள்ள ஒரு புதிய ஆய்வு, மலையேற்ற வீரர்களும், சுற்றுலாவாக மலையேறுபவர்களும் சங்கமிக்கும் எவரெஸ்ட் அடிவார முகாமில் நடைபெறும் மனித நடவடிக்கைகள் ‘கும்பு’ பனிப்பாறை உருகுவதற்குப் பங்களிக்கின்றன என்பதைக் கண்டறிந்துள்ளது.

நேபாளத்தின் நில மேலாண்மை அமைச்சகத்தைச் சேர்ந்த மூத்த நில அளவை அதிகாரி ஒருவரை உள்ளடக்கிய பன்னாட்டுக் குழுவொன்று மேற்கொண்ட ஆய்வில் 2023-ஆம் ஆண்டின் வசந்த கால மலையேற்றப் பருவத்தின்போது, முகாமில் நடைபெறும் நடவடிக்கைகளின் மூலம் வெளியாகும் வெப்பத்தையும் ஆய்வு செய்துள்ளனர். இதில் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு (LPG), மண்ணெண்ணெய் மற்றும் பெட்ரோல் ஆகியவற்றின் பயன்பாடும் அடங்கும். மேலும் மனிதச் சிறுநீர் வெளியேற்றத்தால் உருவாகும் வெப்பம், உலகளாவிய பருவநிலை மாற்றம் ஆகிய மூன்று முக்கியக் காரணிகளை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர். ஆம், சிறிய அளவில் அல்ல; மலையேற்ற வீரர்களும், வழிகாட்டிகளும் தங்கும் இந்த முகாமில் நாளொன்றுக்குச் சராசரியாக 6000 லிட்டர் சிறுநீரைப் பனியில் கழிக்கின்றனராம். இதனால், ஒரு பருவகாலத்தில் மட்டுமே, தோராயமாக 154 டன் பனிப் பாறைகள் உருகுவது கண்டறியப்பட்டுள்ளது.

# கழக ஏட்டுக்கு நன்கொடை

ஆசிரியர்கள் சிவகாமி, சிவக்குமார் முயற்சியில் ஆதரவாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் ஒருங்கிணைந்து வாட்ஸ்அப் குழு வழியாக புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு மாதம் ரூ. 500 என நன்கொடை திரட்டி வருகின்றனர். ஓராண்டு செயல்திட்டமாக இதைச் செயல்படுத்தி வருகின்றனர். செப்டம்பர் மாத நன்கொடையாக ரூ.10,000 வழங்கியுள்ளனர்.

தோழர் கண்ணன் சென்னை ரூ.3000 கழக ஏட்டுக்கு நன்கொடை வழங்கினார்.

**நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். – (ஆசிரியர்)**

# வழக்கறிஞர் இரண்யாவுக்கு பாராட்டு விழா; கழக ஏட்டுக்கு ரூ.5000 நன்கொடை வழங்கினார்

கழகத் தோழர் இரண்யா வழக்கறிஞராகப் பதிவு செய்ததைப் பாராட்டும் விதமாக திருவல்லிக்கேணி பகுதிக் கழகம் சார்பில் தோழர்கள் சூர்யா (பகுதி அமைப்பாளர்), கோபிநாத் (பகுதி தலைவர்) ஆகியோர் செப்-6 அன்று மாலை 6 மணியளவில் விஜயா மண்டபத்தில் பாராட்டு விழா ஏற்பாடு செய்திருந்தனர்.



மாவட்டச் செயலாளர் உமாபதி நிகழ்வை ஒருங்கிணைத்தார். தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், வழக்குரைஞர் ரமேஷ் பெரியார், மதுரை வாசுகி மற்றும் மஞ்சுநாதன் ஆகியோர் உரையாற்றினர். சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றனர். நிறைவாக தோழர் இரண்யா நன்றி கூறினார். வழக்கறிஞராக ஆனதற்கு மகிழ்வாக ரூ.5000 புரட்சிப் பெரியார் முழக்கத்துக்கு நன்கொடையாக சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதியிடம் வழங்கினார்.

## பிள்ளையார் அரசியல்

**வாளும் வடிவேலும் வாய்த்த வெடிகுண்டும்**
**நாளும் உயிர்குடிக்க நான்தருவேன்– நீளும் கை**
**பொங்கும் எரிமுகத்துப் பூதக் கணபதியே**
**எங்கும் கலவரத்தை தா.**

## பெரியார்

**அறிவில் பெரியார் அழகில் பெரியார்**
**புரிநூல் மனிதனைப் பூட்டும் பெரியார்**
**கருப்புக்குரியார் கருத்துக்கு ரியார்**
**வெறுப்பினில் வைப்பார் நெருப்பு.**

**அண்மையில் முடிவெய்திய தோழர் வைகறை வாணன் "கொடை தருக கோடி பெறுக" என்ற தலைப்போடு எழுதி 2019-ல் வெளியிட்டிருந்த " உரைநடை வெண்பா" நூலில் இடம் பெற்றுள்ள சில வெண்பாக்கள்…**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : september 17,2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran